MAY 2024 **U/ID 30624/UCL6A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. "குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" – இவ்வடி இடம்பெறும் இலக்கியம் எது?

2. எட்டுத்தொகையிலுள்ள புற இலக்கியங்கள் எவையெவை?

3. நற்றிணைக்கு வழங்கப்பெறும் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

4. தமிழ்க்காதல் என்ற நூலினை எழுதியவர் யார்?

5. எட்டுத்தொகையுள் யாப்பு வகையால் பெயர் பெற்ற இலக்கியம் எது?

6. முல்லைக்கலியைப் பாடிய புலவர் யார்?

7. புறநானூற்றினைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் யார் யார்?

8. பாடாண் திணை என்றால் என்ன?

9. பழனி என்னும் ஊர் இலக்கியங்களின் என்ன பெயராகப் பதிவு செய்யப்பட்டுள்ளது?

10. முல்லைப்பாட்டு இலக்கியம் அகமா? புறமா? அகப்புறமா?

11. வெள்ளம் ஆண்டு என்பதன் பொருள் என்ன?

12. அந்தணப் பள்ளியில் வாழ்வோர் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. சங்க இலக்கியச் சிறப்பியல்களைப் பட்டியலிடுக.

14. நற்றிணை, பாலைப் பாடலின் உடன்போகா நின்றாரை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லிய கூற்றினை எடுத்துரைக்க.

15. "நிலத்தினும் பெரிதே வானினும்..." எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதி விளக்குக.

16. ஆயர் இளைஞர் எறுதழுவலுக்கான எங்ஙனம் தொழுவில் பாய்ந்தனர்?

17. "ஒரு நாள் செல்லம்..." எனத் தொடங்கும் பாடலின் அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவை எங்ஙனம் பாடுகிறார்?

18. கடல்வளம் கொண்ட சாலியூரைக் கொண்ட வெற்றி எத்தகையது? விளக்குக.

19. மதுரைக்காஞ்சி காட்டும் குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளங்களை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. நற்றிணையின் குறிஞ்சித் திணைப் பாடலின் பொருள் நயங்களை விவரி.

21. தலைவன் கூற்றுப் பாடல்களின் கருத்துக்களைக் குறுந்தொகை வழியாக விளக்குக.

22. ஆயர் மகளிர் ஏறு தழுவும் இளைஞனைப் பற்றி உரையாடும் காட்சிகளை விளக்கி உரைக்க.

23. கபிலரின் பாட்டுத் திறத்தினைப் புறநானூற்றுப் பாக்களின் வழிநின்று தெளிவுறுத்துக.

24. அறுவகை படை வீடுகளின் சிறப்புகள் என்னென்ன? விவரி.

———————